ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

SANGANATHAM
சங்கநாதம்

Oct, 2023

37-4

அன்பும் பண்பும் மிக்க அங்கத்தவர்களே, உங்கள் எல்லோருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

ஐப்பசி மாதம் 1 திகதி நடந்தேறிய 'சங்கமம்' பெருவிழா, எமது மன்றத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல் என்றே சொல்லலாம். மன்றத்தின் 37 வருடகால வளர்ச்சியின் பெருமைகளை பறைசாற்றி, மன்ற உறுப்பினர்களதும் மன்ற உத்தியோகத்தர்களதும் பன்முகத்திறமைகளை வெளிக்காட்டி நாம் எல்லோரும் சேர்ந்து கொண்டாடிய நாள். இந்த விழாவை திறம்பட நடாத்த உதவிய நலன் விரும்பிகள், அனுசரணையாளர்கள், கொடை வழங்கியோர், கடந்த 8 மாதங்களுக்கு மேலாக தமது நேரத்தையும் திறமைகளையும் அர்ப்பணித்து மன்றத்திற்கு உதவிய அங்கத்தவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த ஆவணி மாதம் நடந்தேறிய வருடாந்த பொதுகூட்டத்தில், தமது தவணைக்காலத்தை முடித்த 6 நிர்வாகசபை உறுப்பினரகள் வெளியேற, புதிதாக 6 அங்கத்தவர்கள் எம்மோடு இணைந்துள்ளார்கள். அவர்கள் புதிய எண்ணங்கள், சிந்தனைகளுடன் எமது மன்றத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் என்ற ஆர்வத்துடன் வந்துள்ளனர். கடந்த 37 வருட காலமாக பல இடங்களில் தற்காலிக வாடகை அலுவலகங்களிலேயே எமது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். எமக்கென்று ஒரு சொந்த அலுவலகம் வேண்டும் என்ற நீண்ட நாள் கனவை நினைவாக்கும் தருணம் இப்பொழுது வந்து விட்டது என்றே கூறலாம். இதனை கருத்தில் கொண்டு, எமது நிர்வாகசபை உறுப்பினர் செந்தில் ஆறுமுகம் தலைமையில் "எமக்கென்று ஒரு வீடு" என்ற திட்டத்தின் கீழ் ஒரு குழு உருவாக்கப்பட்டு மன்றத்திட்கு சொந்த அலுவலகம் வாங்கும் பணிகள் ஆரம்பமாகி விட்டது. மன்றத்தை பொறுத்த வரை எமது அடுத்த கட்ட நகர்வு ஆரம்பமாகி விட்டது .இந்த திட்டம் நிறைவேற மன்ற அங்கத்தவர்கள் அனைவரதும் ஆதரவினை வேண்டி நிற்கின்றேன்

அடுத்தடுத்த மாதங்களில் எமது வருட இறுதி நிகழ்வுகளான நவராத்திரி விழா, மைல்கல் பிறந்தநாள் கொண்டாட்டம், தீபாவளி மற்றும் நத்தார் கொண்டாட்டங்கள் எல்லாம் பரோஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. எமது வாராந்த நிகழ்ச்சிகள் வழமைபோல் நடைபெறும். அத்துடன் ஸ்மார்ட் கருவிகளை திறம்பட பாவிக்க உதவும் வகுப்புகளையும் ஆரம்பிக்க உள்ளோம். உள வள வளர்ச்சிக்கு உதவும் பட்டறைகள் நடத்துவதற்கு தேவையான பணத்தை பெறுவதற்கும் மன்ற நிறைவேற்று இயக்குனரின் உதவியுடன் ஒரு அரசாங்க மானியத்திட்கு விண்ணப்பித்துள்ளோம்.

அடுத்த வருடத்திக்கான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாக்கள் குறித்த திட்டமிடல் வேலைகளும் ஆரம்பமாகி விட்டது. மே மாதம் கிழக்கு ஐரோப்பாவிட்கு 15 நாட்கள் பயணம் ஒன்றினை சுற்றுலா குழு ஏற்பாடு செய்துள்ளது.

நான் முன்னைய இதழ்களில் குறிப்பிட்டதுபோல், ஒரு மன்றத்தின் வளர்ச்சி ஒருவர் கையில் இல்லை. உங்கள் எல்லோருடைய கைகளிலும்தான் உள்ளது. ஆகவே, உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. இவ்வாண்டும் மன்றத்திற்கு ஒரு சிறப்பான ஆண்டாக அமைய உங்கள் ஆசிகளை வேண்டுகின்றேன்.



வாழ்க ஒன்றாரியோ முது தமிழர் மன்றம்.

அன்புடன்,

சீவரத்தினம் மகேந்திரா ---தலைவர்




First row (left to right): K. Kuganesan-Treasurer, Raj Thavaratnasingham- Vice President, S. Makendra- President, Gnana Sundaraiswaran-Secretary, P. Kaneshalingam (Editor)

Second row (left to right): Directors: John Sebastian, Seetha Mills, Parama Natkunarajah, Anju Jegathiswaran, P. Kumarakulasundaram, A. Senthilvadivel

The following Resolutions were passed by the general body at the Annual General Meeting -18th August 2023

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி நடைபெற்ற ஆண்டுக்கூட்டத்தில் பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரப்படவிருக்கும் பிரேரணைகள் பின்வருமாறு:

RESOLUTION 1: 6.5A: A quorum of Special, General and Annual meetings shall be 20% of the active membership or 150 members, whichever is less.
பிரேரணை 1: கூட்டத்திற்கான குறைந்த நிறைவெண்ணிக்கை நல்ல நிலையிலுள்ள உறுப்பினர்கள் தொகை 20% அல்லது 150 ஆக இருத்தல்.

Resolution 2: 3.2 Revised membership fees and dues
Single membership $35, and Enrolment fees for new membership $25
The revised fees become operational with effect from 1st January 2024.
பிரேரணை 2: 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் தனியொருவருக்கு 35 டொலர்களாகவும், புதிய அங்கத்தவர் ஒரு முறை பதிவுக் கட்டணம் 25 டொலர்களாகவும் உயர்த்தப்படுகிறது.

2023க்கான வருடாந்த சந்தாப்பணம் குறித்து நினைவூட்ட வேண்டிய தருணமிது. இந்த வருடத்துக்கான சந்தாப்பணத்தை தபால் மூலமோ, வங்கி பரிமாற்றம் மூலமோ (e-transfer) அல்லது வாரநாட்களில் மன்ற அலுவலகத்திலோ செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

## Sub Committee Members 2023/24

### Finance & Fundraising

K. Kuganesan (chair)
Senthil Arumugam
K. Arasaratnam
S. Srijeyanathan
M.V. Jeganathan
Raymond Santiago
Pathmini Jeyanathan
S. Sritharan

### Friendly Visits & Tele Assurance

Parama Natkunarajah (chair)
Ira Balasubramaniam
Devika Masilamany
Pavalamany Yoganathan
Jeyamalar Puvanesasingam

### Buildings Committee:

Senthil Arumugam (Chair)
K. Kuganesan
Manuel Jesudasan
R. Mahendran,
S. Srijeyanathan
S. Balachandran
M.V. Jeganathan

### Culture and Festivals & Ilam Thalirkal

Gnana Sundaraiswaran (chair)
Thavamalar Arulanantham
Seetha Mills
Rathini Sebastian
Wilmot Olagasegaram
Seetha Balakrishnan
N. Nandakumar
Marie Sarvanandan

### Together with Friendship

S. Makendra (chair)
Indra Nadarajah
Ranee Mahalingam
Sivajini Jegatheeswaran
Lydia Tharmarajah
Kris Jeyanathan

### Technical support

John Sebastian (chair)
B. Balakrishnan
K. Thanabalasingam

### Volunteer & Membership management/Advocacy:

Raj Thavaratnasingham (chair)
Indra Nadarajah
Manuel Jesudasan
Sivajini Jegatheeswaran
Senthil Arumugam
Lydia Tharmarajah
Raymond Santiago
S. Rajendra

### Internal Auditor

C. Pathmanathan

### Tours & Picnics

S. Makendra (chair)
Kumar Ponnudurai
Anju Jegatheeswaran
R. Mahendran
Victor Santhiapillai
S. Sritharan

**Ontario Volunteer Service Awards –by Ministry of Citizenship**




**10 years: Pavalamany Yoganathan, Rukmani Velupillai**
**5 years: B. Balakrishnan, K. Thanabalasingam, Shantha Somaskandar, P. Kaneshalingam**
**Youth: Abeesha Umeshkumar**

## இதழாசிரியரின் பார்வையில்..........



அன்பிற்கும் பெருமதிற்பிற்குரிய மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த வணக்கம்.

நீண்ட காலமாக மன்றத்தின் நோக்கில் இருந்துவந்த ஆசை" சங்கமம்"எனும் பெருவிழா மூலம் வடிவமாகி உள்ளது. கலந்துகொண்ட அனைவரும் மகிழ்வுடனும் பூரிப்புடனும் இருப்பீர்கள். மண்டபம் நிறைந்த (500கும்) மேற்பட்ட உறவுகள் கூடினர். நேருக்கு நேர் சந்தித்து அளவளாவி தமது பாசத்தை வெளிப்படுத்தினர். நடந்தேறிய நிகழ்வுகள் அனைத்தும் உடலுக்கும் உள்ளத்துக்கும் உட்சாகமூட்டுவதாக அமைந்திருந்தது. மன்ற தயாரிப்பில் உருவான மன்றத்தின் 37 வருடகால பாதையும், ஒற்றுமையின் சக்தியையும் பெற்ற வளர்ச்சியையும் தத்ரூபமாக வெளிக்கொண்டு வந்த "புதியதோர் உலகம் செய்வோம்" எனும் நாட்டிய நாடகம் மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. இதன்மூலம் மன்றத்தின் செயட்பாடுகள் உறுப்பினரல்லாத எம்மவர் மத்தியிலும் சென்றடைந்தது.

இவ்விழாவின் வெற்றிக்கு கடந்த எட்டுமாத கால பலரின் உழைப்படங்கியுள்ளது. தலைவர் திரு. சீ. மகேந்திரா, நிறைவேற்று இயக்குநர் திருமதி வசந்தி சாந்தகுமார், இதற்கென அமைக்கப்பட்ட விசேட குழுவினர் மன்ற அலுவலர்கள் நிர்வாகசபையினர், தன்னார்வதொண்டர்கள் என பலர் அயராது பணியாற்றியுள்ளனர்.அனைவரது பங்களிப்பும் போற்றுவதற்குரியது. சாதனைகள் பலவாகினும் சாதிக்க இருப்பதோ இன்னும் பல.

அண்மையில் தாயகம் சென்று வந்தேன். நான் அவதானித்த ஒருசில விடயங்களை சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளேன். ஆலயபணிகள் நன்கு நடைபெற்று வருகிறது.அன்னசத்திரதொண்டும் கணிசமாக காணப்படுகின்றது. முதியோர் உடல்நலம், வாழ்வு திருப்திகரமாக காணப்படவில்லை. முக்கியமாக படிப்பதற்கு ஆர்வமுள்ள பல சிறார்கள் ஏழ்மையின் காரணமாக வாய்ப்பை இழந்து விடுகின்றனர். இது அன்றும் இருந்தது, ஆனால் இன்று மிகவும் அதிகரித்து காணப்படுகிறது. கல்வி ஏழைகளுக்கு செல்வம், செல்வந்தர்களுக்கு அணிகலன், வீட்டிற்கு விளக்கு, நாட்டிற்கு நன்மை, பெண்களுக்கு பாதுகாப்பு.கல்வி ஒன்றுதான் படிக்கின்ற மாணவர்களையும் அவர்கள் பிறந்த வீட்டையும்,நாட்டையும் உயர்த்தக்கூடியது. கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் பண்பாடு, பண்பாட்டின் பயன் ஒழுக்கம். தனது வாழ்க்கைப் பாதையை மட்டுமின்றி பலரின் வாழ்க்கைப்பாதையை மாற்றிய பலரும் இருக்கின்றனர். இவர்களுடன் மேலும் பலர் இணைய வேண்டியது காலத்தின் கட்டாயம். ஒழுக்கத்தை உருவாக்கி வளர்ப்பது கல்வியின் குறிக்கோள். தனிமனித வளர்ச்சியும், சமுதாய முன்னேற்றமும் ஒழுக்கத்தின்பாற்பட்டது. இதுவே இன்று தாயகம் முதலில் வேண்டி நிற்கிறது.

இலையுதிர் காலத்துள் பிரவேசித்துளோம். குளிர்காலம் எம்மை வரவேற்கவுள்ளது. முன்பு பச்சையாகவிருந்த மர இலைகள் ஆரஞ்சு, சிவப்பு, மஞ்சள் என பல்வேறு நிறங்களிலும் , பல்வேறு வடிவங்களிலும் பார்க்க மிகவும் அழகாவும் உள்ளத்திற்கு மகிழ்வும், புத்துணர்வு தருவதாகவும் உள்ளது. குளிர்காலத்தினை மகிழ்வுடனும், ஆரோக்கியத்துடனும் கழிப்பதற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இக்காலப்பகுதியில் மன்றம் வாரம் ஐந்து நாட்களுமுள்ள வழமையான நிகழ்ச்சிகளுடன் தீபாவளி, நத்தார், பொங்கல், மன்றத்தின் பிறந்தநாள், தமிழ்மரபுதிங்கள் எனும் விழாக்களுடன் மேலும் பல நிகழ்வுகளை வழங்க நிர்வாகம் தயாராகவுள்ளது. உறவுகள் மன்றத்துடன் இணைப்பிலிருந்தபடி குளிர்காலத்தினை ஆரேக்கியமாகவும்,மகிழ்வுடனும் வெற்றி கொள்ள முடியும்.

‘பெற்ற பிள்ளை கைவிட்டாலும் தாம் கற்ற கல்வி கைவிடாது’ -- மகாத்மாகாந்தி

அன்புடன்

பொ.கணேசலிங்கம்.

- The power of a morning routine: How you start your day sets the tone for everything that follows. By creating a morning routine that includes meditation, visualization, exercise, reading, and other powerful habits, you'll set yourself up for success and happiness.

# சங்கமம்----ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம் முன்னெடுத்த மாபெரும் கலைவிழா







37 வருடப்பாரம்பரியம் மிக்க ஒன்ராரியோ முதுதமிழர் மன்றத்தினால் ஒக்டோபர் மாதம் 1ம் திகதி பிரைட்டன் மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் கலைவிழா மன்ற வரலாற்றில் முக்கியத்துவம் பெற்று விட்டதொரு நிகழ்வு என்றே குறிப்பிடலாம். 1986ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மன்றம் பரிமாணங்கள் பல கடந்து, தமிழ் மூத்தோருக்கும், இளையோருக்கும், சமூகத்திற்கும் பல சேவைகளை புரிந்து வரும் வேளையில், சங்கமம் மன்றத்தின் பெருமையை பறைசாற்றியிருக்கிறது. கடந்து வந்த பாதையை சற்று பின்னோக்கிப் பார்க்கவும், மூத்தோரின் திறமைகளை அரங்கேற்றவும், மன்றத்தின் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு இருக்கப்போகிறது என்பதை கட்டியம் கூறியிருக்கிறது சங்கமம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், ரொரன்ரோ மாநகரசபை மேயர், மற்றும் பல விசேட விருந்தினர்கள், சக மன்றங்களின் பிரதிநிதிகள், மன்ற அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார், நண்பர்கள் என 500க்கும் மேற்பட்டோருடன் களைகட்டியதொரு நிகழ்வு. மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பித்து, தலைவரின் வரவேற்புரை, ரிஷியின் வீணாகானம், அர்த்தமி சிறீசிவாவின் அற்புதமான தில்லானா நடனம், மெகாடியூனர்ஸ் இசைக்குழுவின் மெய்மறக்க வைத்த இசைநிகழ்ச்சி, இவையனைத்துக்கும் மகுடம் வைத்தது போல மன்ற அஙகத்தவர்களின் 'புதியதோர் உலகம் செய்வோம்' இசை-நாட்டிய நாடகம் என ஒன்றன்பின் ஒன்றாக முத்தான நான்கு நிகழ்வுகள். இறுதியில் நாவுக்கு விருந்தாக இரவுணவு என நிறைவு பெற்றது சங்கமம். மன்றம் கடந்து வந்த பாதையினை படம்போட்டுக் காட்டியது விவரணச்சித்திரம். மற்றும் சங்கமம் நிகழ்வுக்கென்று பிரத்தியேகமாக ஒரு இதழும் வெளியிடப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களது ஆசிச்செய்திகள், மன்ற அங்கத்தவர்களது கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றோடு மன்றத்தின் 37 வருடகால வரலாறும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் முக்கிய அம்சமாக விருதுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் பிரதான அநுசரணையாளர்களான Dr. Suganthy Bream Associates, Dr. Ajantha Yesudasan & Christeen Seevaratnam (Chapel ridge funeral home) மூவருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. மன்றத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், மன்றத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவருமான திருமதி மணி பத்மராஜாவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மற்றும் 37 வருடகால வளர்ச்சிக்கு பல மூத்தோர் முன்னின்று உழைத்திருக்கும் நிலையில், மன்றத்தினை அடுத்து வரும் காலங்களில் நடாத்திச் செல்லப்போவது இளையோரின கைகளில்தான் இருக்கிறது என்பதை முன்னிறுத்தும் வகையில், சர்வதேச ரீதியில் சமூகநலத்திட்டங்கள் பலவற்றோடும் தன்னை இணைத்து செயலாற்றிக் கொண்டிருக்கும் செல்வி. அஞ்சலி பிறேம் இளையோருக்கான விருதினை பெற்றுக் கொண்டார். மன்றம் தமிழ் மூத்தோருக்கு மட்டுமல்ல, இளையோர் மற்றும் சமூகநலத்திட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்தி செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்திய ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம் முன்னெடுத்த சங்கமம் கலைவிழா சிறப்பாக நடந்தேற முன்னின்று உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகள். வருங்காலங்களில் மேலும் பல புதிய விடயங்களை மன்றம் முன்னேடுக்கும் என்பதில் எதுவித மறுப்புமில்லை. வாழிய ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்!

வசந்தி சாந்தகுமார்


GOLD
Congratulations!






SENIOR TAMILS' CENTRE OF ONTARIO
ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம்
புதியதோர் உலகம் செய்வோம்
Puthiyathor Ulagam Seiwom


GTA Video Entertainment Inc.
Video, Photography & Livestream





## Volunteer and Membership Management/Advocacy

As we eagerly look ahead, STC has established seven sub-committees to propel us into the future. These committees are diligently crafting innovative ideas to bring about positive change and growth within our organization. STC is truly fortunate to have each one of you as active members as we embark on this transformative journey.

As the "Volunteer and Membership Management/Advocacy" sub-committee, our name speaks to our purpose—we are here to support you in every conceivable manner. We are both honored and thrilled to be part of this exceptional committee devoted to volunteers, membership, and advocacy. Our mission transcends mere obligation; it is a shared passion that binds us together. We aspire to be one of the catalysts for positive change within STC, and we firmly believe that together, we can accomplish extraordinary feats.

Volunteers are the lifeblood of any Non-Profit Organization, and we are committed to nurturing an environment where their dedication and commitment can flourish. We eagerly invite you to join us in building a reservoir of volunteers, enabling us to extend our services to everyone. Our vision is rooted in seniors assisting fellow seniors. Membership within STC transcends numerical statistics; it revolves around creating a supportive community for seniors where every voice is valued, every senior is cared for, and every Tamil senior in Ontario becomes an integral part of our family. Advocacy serves as the conduit between our ideals and reality, and we will champion causes that resonate with STC's collective values.

Let us always remember that our work is not merely a duty; it is an opportunity to leave a lasting impact. To make this impact, we earnestly invite you to join us as volunteers and advocates. Together, we aspire to demonstrate to our members the remarkable achievements passionate individuals can attain when they collaborate. We want to show how, together, we can lend a helping hand to those in need, ensuring that no one is left behind.

In case you missed STC's "Sangamam" Gala dinner on October 1, 2023, it was a resounding success, all thanks to the collaborative efforts of our dedicated volunteers. Please help us spread the word. If you know of others who have not yet engaged with STC, kindly encourage them to join and become part of this movement. Exciting developments lie ahead, and we aspire for everyone to be part of this promising journey.

Raj Thavaratnasingham,

Vice President/ Chair--Volunteer & Membership management/Advocacy

ஒன்ராறியோ முது தமிழர் மன்ற உறுப்பினர்களுக்கு இலவச சட்ட ஆலோசனையும், பின்வரும் விடயங்களுக்கு இலவச சட்ட சேவையும் பிரபல சட்டத்தரணி திரு மனுவேல் இயேசுதாசன் அவர்களால் வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்:

- Power of Attorney
- Last Will
- Affidavits
- Certify copies.
- Any other matters that require humanitarian assistance.

மேற்கூறப்பட்ட சேவைகள் மாதத்தின் முதல் கிழமை வருகின்ற புதன் கிழமைகளில் காலை 11:மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரை ஒன்ராறியோ முது தமிழர் மன்ற அலுவலகத்தில் நடை பெறும்.

சேவை பெற விரும்புவோர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். முற்பதிவு அவசியம்

தொடர்புகளுக்கு தொலை பேசி இலக்கம்: 416-496-2897/416-496-8850



# கோகிலா விவேகானந்தன்

**மண்ணில்: 22-08-1939** **விண்ணில்: 28-08-2023**

**ஒன்ராரியோ முதுதமிழர் மன்றச்சோலையில்**

**கோகிலாக்குயில் கூவ மறந்து, பறந்து சென்றதெங்கே?**

ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம் அதிலே, ஒன்றி எழு இயக்குனரின் குழுவில் கூடி
மென் தாய் நீர் செயலாளர் பதவியேற்று, கொஞ்சும் இசைக்குயிலாகக் குரல் எழுப்பி
கொண்ட பணி பல முடித்த கோகிலாவே!
தொன்னூறு அகவையை யான் கண்ட வேளை, தொடர் நட்பின் பயன் தன்னைத் தெரியக்காட்டி
''செம்மனத்தின் செம்மல்'' எனப் புதிய பட்டம்
பொன் மனத்துச்செல்வியே நீர் முதன்மை வாழ்த்தை, உன் கரத்தால் பெற வைத்த உடன்பிறப்பே!
கொடும் புற்றுநோய் தாக்கி நொந்த போதும், 'திடும்' என்றே சாவுவரல் தெரிந்த போதும்
தளிர்க்காந்தள் விரல்களிலே தெம்பை ஏற்றி, ஒளிர் நட்பைக் காத்திடவோ உவந்தளித்தீர்?
பல்கலையின் கழகமதில் பட்டம் பெற்றும், பலருடனும் பண்பமையப் பழகி,
மூத்தோர் சொல்லரிதாம், துன்பம் எலாம் தீர்த்துழைத்துச், சுவையூட்டும் மன்றினுக்கோர் சுடர்விளக்காய்
செல் உரிய வாகனத்தைச் சலிக்காதோட்டி, செயல்வீரப் பெண்மணியாய் திகழ்ந்த குயிலே!
கொடையாய்க் கொள் கொழுநனை நீர் இழந்தபோதும் கூனாது, குலையாது நின்று நின் மக்கள் இருவர்
புடைசூழப் பாரதிகாண் புதுமைப்பெண்ணாய் புகழ்ப்பணிகள் புரிந்த வீரக்கோகிலாவே
விதிவலிதாய் பறித்திட்ட இடியினாலே வலிவிழந்து தவிக்கிறது வடிகண்ணீர் சொரிகிறது.
நிதி அதுவாய் நீர் தந்த பணிகளாலே நினைத்துந்தன் ஆன்மா சாந்தி
நிமலன் இறைபாதமலர் இணைத்துக்காண வேண்டுகின்றோம்

**நட்பின் காணிக்கையாய், ஆக்கம்: இளவாலையூர் இராசநாயகம்----ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்**





3902 Jeyanthy Renoyld
3903 Shanthi Rajaratnam
3904 Kuhambikai Sivarajah
3905 Thayaparanathan Kandiah
3906 Ranee Francis
3907 Marie Sarvananthan
3908 Alfres Sarvananthan
3909 Visuvalingam Varatheswaran
3910 Rathimathi Sabanathan
3911 Alosious Rajanayagam
3912 Rajeswary Muthulingam
3913 Sothy Sinnatamby
3914 Alice Kaneshalingam
3915 Mr. Christion Kanagaratnam
3916 Ambalavanar Tharmakulasingam
3917 Parameswary Tharmakulasingam
3918 Pushpalatha Srirenganathan
3919 Gurunathan Thevarajah
3920 Shanmuganathan Kandiah
3921 Bahavathy Shanmuganathan
3922 Meenalosani Thanayagam
3923 Maria Flora Angelo
3924 Sinniah Selvaratnam
3925 Rajeswary Selvaratnam
3926 Muthuraniamma Sivapiragasam
3927 Mohan Raj Sathianathan
3928 Veeragathipillai Sivabalasundaram
3929 Ranjana Sivabalasundaram
3930 Nanthini Suriyakumaran
3931 Paddy Gill
3932 Rani Ganeshan
3933 Jaya Kulanathan
3934 Ravivarma Chelliah
3935 Thanalakshmi Sabanadesan
3936 Desmond Joseph




**The Senior Tamils' Centre deeply regrets to record the name of the following member who passed away in the recent past and condole with his family**

- Mrs. Kohila Vivegananthan, Mem # 1837, passed away on the 22nd of Aug 2023. (Former Vice resident/ Secretary/ Board member)
- Mrs. Thilaga Gnanasabapathy, Mem # 910, passed away on the 5th of Oct 2023.
- Mrs. Pavalam Somasundaram, Mem # 2091, passed away on the 30th of Sep 2023.
- Mrs. Saraswathy Thiagarajah, Mem # 2876, passed away on the 21st of Sep 2023.




**Different Fingers, Equal Worth!**

Our five fingers are not equal. Each finger has its own unique size, shape, and function. Just like our fingers, people also have differences that make them special. We all have our strengths, weaknesses, and individual qualities that make us who we are. It is important to understand that these differences make us unique and special. As the famous saying goes, "Don't judge a book by its cover." This means we should not judge someone based on their appearance or abilities. Instead, we should appreciate and respect each other's differences.

## CTC 5th Annual Tamil Canadian Walk, Sep 10th, 2023






## STC one day summer trips



## Trip to Pittsburg Temple (USA)

## STC Summer Picnic at Neilson Park









## வருடாந்த நத்தார் சீட்டு இழுப்பு 2023

வருடாவருடம் மன்றத்தினால் நத்தார் கொண்டாட்டத்துடன் இணைந்து வருடாந்த நத்தார் சீட்டு இழுப்பு நடைபெறுவது வழக்கம். மன்ற செயபாடுகளுக்கு இந்த சீட்டு இழுப்பினால் பெறப்படும் பணம் பெரிதும் உதவியாகவுள்ளது என்பது நீங்கள் அறிந்ததே. ஆகவே உங்களால் முடிந்தவரை உங்கள் ஒத்துழைப்பை நாடி நிற்கிறோம்

இந்த வருடத்துக்கான வருடாந்த நத்தார் சீட்டு இழுப்பு டிசம்பர் மாதம் பரோஸ் மண்டபத்தில் (Burrows Hall Community) நடைபெறவுள்ள நத்தார் கொண்டாட்டத்தின் போது (Dec 15th 2023) இடம்பெறவுள்ளது. சீட்டுக்களை வார நாட்களில் மன்ற அலுவலகத்தில்/ வெள்ளிக்கிழமைகளில் Burrows Hall நிகழ்வுகளில். அல்லது e-transfer மூலம் பணத்தை செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம். நத்தார் சீட்டுக்களை வாங்குவோர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை

**1st prize: $300 cash** **2nd prize: $200 cash** **3rd prize: $100 cash**

**4th prizes: $50 (2 gift cards)** **Donation: $2.00 per ticket (10 tickets in a book)**

உங்கள் வருங்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் நிகழ்காலத்தில் நல்லவிதமாக செயல்பட்டால் உங்கள் வருங்காலம் தன்னால் மலரும்.

# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
## SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

Registered Non- Profit Corporation # 923023
5200 Finch Ave. E, Unit 203, Scarborough ON M1S 4Z2

Tel: 416-496-2897 /416-496-8850 Email: admin@seniortamilscentre.org

Website: www.seniortamilscentre.com



President
Seevaratnam Makendra
416-816-2612

Vice President
Raj Thavaratnasingham
416-522-9972

Secretary
Gnana Sundaraiswaran
647-449-0343

Treasurer
Kanes Kuganesan
416-827-6875

Directors

Parama Natkunarajah
647-778-3612

Seetha Mills
416-756-4328

Kumarakulasunderam
Ponnudurai
647-984-8636

John Sebastian
647-627-7503

Arumugam Senthilvadivel
416-616-6031

Anjuthamalar
Jegatheeswaran
416-931-9253

Editor/Director
P. Kaneshalingam
437-778-1904

Executive Director
Vasanthy Shanthakumar
647-238-0503








**Date: 20th Oct 2023 (Friday) Time: 9.30am**

**Venue: Burrows Hall Community Centre**

**1081 Progress Ave. Scarborough**




**Date: 24th Nov 2023 Time: 9.30am**

**Venue: Burrows Hall Community Centre**

**1081 Progress Ave. Scarborough**




**Date: 15th Dec 2023 Time: 9.30am**

**Venue: Burrows Hall Community Centre**

**1081 Progress Ave. Scarborough**

வாழ்க்கையில் ஒன்றை விட இன்னொன்று
சிறந்தது என்று எண்ணுவதை விட
ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்துவம் இருக்கும்
என்று புரிந்து கொண்டு இயல்பாக ஏற்றுக்
கொண்டால் வாழ்க்கை சிறக்கும் ...

- விதி என்பது உங்களுக்கு நீங்களே உருவாக்கிக்கொள்வது. உங்கள் விதியை நீங்களே உருவாக்கத் தவறும்போது அது தலைவிதியாகிறது.
- உங்கள் வாழ்க்கையில் குறிப்பாக கசப்பான விஷயங்கள் நிகழ்ந்திருந்தால், நீங்கள் விவேகமானவராக மாறவேண்டும், காயப்பட்டவராக அல்ல.
- மன அழுத்தம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் விளைவாக ஏற்படுவதில்லை உங்களை நீங்களே நிர்வகிக்க முடியாததன் விளைவாக ஏற்படுகிறது.